உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்

(All Rights Reserved)

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்."

மலர் 3. Vol 3. | வெகுதான்ய ஹூ மார்கழிமீ 1உ டிசம்பர்—1938 | இதழ் 9. No. 9.

திருப்புகழ்.

பழநி—(திருவாவினன்குடி)

தலைவலி மருத்தீடு காமாலை சோகைசுரம்
விழிவலி வறட்சூலை காயாசு வாசம்வெகு
சலமிகு விஷப்பாக மாயாவி காரபிணி யணுகாதே

தலமிசை யதற்கான பேரோடு கூறியிது
பரிகரி யெனக்காது கேளாது போலுமவர்
சரியும் வயதுக்கேது தாரீர்சொ லீரெனவும் விதியாதே

உலைவர விருப்பாக நீள்காவின் வாசமலர்
வகைவகை யெடுத்தேதோ டாமாலி காபரண
முனதடியி னிற்சூட வேநாடு மாதவர்க ளிருபாதம்

உளமது தரித்தேவி ஞவோடு பாடியருள்
வழிபட எனக்கேத யாவோடு தாளுதவ
உரகம தெடுத்தாடு மேகார மீதின்மிசை
வரவேணும்

அலைகட லடைத்தேமகா கோர ராவணனை
மணிமுடி துணித்தாவி யேயான ஜானகியை
அடலுட னழைத்தேகோள் மாயோனை மாமனெனு
மருகோனே

அறுகினை முடித்தோனை யாதார மானவனை
மழுவுழை பிடித்தோனை மாகாளி நாணமுனம்
அவைதனில் நடித்தோனை மாதாதை யேயெனவும்
வருவோனே

பலகலை படித்தோது பாவாணர் நாவிலுறை
யிருசரண வித்தார வேலாயு தாவுயர்சேய்
பரண்மிசை குறப்பாவை தோள்மேவ மோகமுறு
மணவாளா

பதுமவய லிற்பூக மீதேவ ரால்கள்துயில்
வருபுனல் பெருக்காறு காவேரிசூழவளர்
பழநிவரு கற்பூர கோலாக லாவமரர் பெருமாளே

பதவுரை.

அலை கடல் அடைத்தே-அலைகளையுடைய சமுத்திரத்தை அணைகட்டி யடைத்து, (ஏ-அசை) மகா கோர ராவணனை-மிகவும் கொடுமையைச் செய்த இராவணனை, மணி முடி துணித்து-இரத்தின மகுடங்களையுடைய அவனது தலைகளை யறுத்துத் தள்ளி, ஆவியே ஆன சானகியை - தனது உயிருக்கு நிகரான சீதா பிராட்டியாரை, அடலுடன் அழைத்தேகொள்-வெற்றியுடன் (சிறையினின்று) மீட்டுக்கொண்ட, மாயோனை மாமனெனும் மருகோனே-மாயைக்குத் தலைவராகிய ஸ்ரீ நாராயணமூர்த்தியை "மாமன்" என்று அழைக்கும் மருகரே,! அறுகினை முடித்தோனை - அறுகம் புல்லை சடைமுடியில் தரித்துக் கொண்டிருப்பவரும், ஆதாரம் ஆனவனை - எல்லா வுலகங்களுக்கும் உயிர்களுக்கும் ஆதாரமாக இருப்பவரும், மழு உழை பிடித்தோனை - மழுவையும் மானையும் தமது திருக்கரத்தில் தாங்கியிருப்பவரும், மா காளி நாண-நடிப்புத்திறத்தில் வல்லவளான காளி யானவள் வெட்கத்தையடைந்து தோல்வியுறுமாறு, முனம் அவை தனில் நடித்தோனை - முன்னளில் (தேவர் மூவாதிகள் கூடிய) பொற்சபையின்கண் அற்புத ஆனந்தத் திருநடனம் புரிந்தருளியவருமாகிய சிவபெருமானை, மாதாதையே எனவும் வருவோனே---"பெருமையின்மிக்க தந்தையே" என்று அழைக்குமாறு அவரிடத்தில் திருக்குழந்தையாகத் தோன்றியருளியவரே,! பல கலை

படித்து ஓது - பற்பல அறிவுநூல்களை நன்கு கற்று தேவரீரது அருட் புகழை யோதுகின்ற, பாவாணர் நாவில் உறை - புலவர்களது நாவில் என்றும் நீங்காது உறைகின்ற, இருசரண-இரண்டு திருவடிகளையுடையவரே,! வித்தார - விசாலமான புலமையை யுடையவரே,! வேலாயுதா - படைக்கல நாயகமாகிய வேற்படையைக் கரத்தில் தரித்தவரே,! உயர் செய் பரண் மிசை-(தினைப்புனத்தில்) உயரமாகச் செய்துள்ள பரண் மீதில் இருந்த, குறப்பாவை தோள்மேவ மோகம்உறு-குறவர்மகளாகவளர்ந்த வள்ளிநாயகியாரது தோளையடைய காதல்கொள்ளும், மணவாளா-மணவாளரே,! பதும வயலில்-தாமரைமலர்ந்துள்ள வளம்பெற்ற வயல்களிலுள்ள, பூக மீதே வரால்கள் துயில்வரு-பாக்கு மரங்களின் மீது வரால் மீன்கள் பாய்ந்து தூங்கும் வண்ணம் உயர்ந்து வருகின்ற, புனல் பெருக்கு ஆறு காவேரி, நீர்பெருக்கு மிகுதியாகவுடைய மகாநதியாகிய காவேரியானது, சூழ வளர் பழநி வரு-சூழ்ந்திருக்க வளர்கின்ற பழநிமலை என்னும் திருத்தலத்தில் எழுந்தருளிவருகின்ற, கற்பூர கோலாகலா-கற்பூர தீபங்களின் கோலாகலத்தையுடையவரே,! அமரர் பெருமாளே-தேவர்களுக் கெல்லாந் தேவராகிய பெருமையை யுடையவரே,! தலைவலி-தலைநோய், மருத்திடு-மருந்திடுதலினால் வருந்தோஷம், காமாலை-காமாலை யென்னுநோய், சோகை-சோகை யென்னுநோய், சுரம்-வெப்புநோய், விழிவலி-கண்ணோய், வறள்-வரட்சி, சூலை-சூலைநோய், காயாசுவாசம்-சுவாசகாசம், வெகு சலம்-அதிகமாக நீர்க் கோத்தல், மிகு விஷப்பாகம்-கொடிய விஷநோய்கள், மாயாவிகாரபிணி அணுகாதே-மாயாவிகாரத்தால் (காமவிகாரத்தால்) வரும்நோய்கள் முதலியவை அடியேனைவந்து அணுகாமலிருக்கவும், தலமிசை-இந்நிலவுலகின்மேல், அதற்கு ஆன பேரோடு கூறி, (வைத்தியர்களிடம் சென்று) மேற் கூறிய நோய்களின் துன்பத்தையும் அந்நோய்களின் பேரையும் விவரமாக எடுத்துச் சொல்லி, இது பரிகரி என,இந்நோய்களை நீக்குவீர் என்று சொன்னால், அவர்காது கேளாதுபோலும்-அவ்வைத்தியர்கள் யான் சொன்னது காது கேட்காததுபோல் இருந்து, சரியும் வயதுக்கு ஏது தாரீர் சொலீர் எனவும்-"வயதின் முதிர்ச்சியால் நோய்கள் வருகின்றன ஆதலால் அப்படி தளர்ந்துக் கொண்டேவரும் வயதை பழையபடி பலப்படுத்துவதற்கு என்ன பொருள் கொடுப்பீர் சொல்லுங்கள்" என்று சொல்லவும், விதியாதே-அடியேனை அந்தவகையில் வைத்தியரிடம் சென்றலையுமாறு விதியாமல் அருள்புரியவும், உலைவு அற-சோக மில்லாமற்படி, விருப்பாக-அன்புடன், நீள்காவின் வாச மலர்-விசாலமான நந்தனவனத்திலுள்ள மணமிகுந்த மலர்களை, வகை வகை எடுத்தே-(நந்தியாவட்டம் மல்லிகை கடம்பு முதலியவைகளை) வகை வகையாக (அன்புடன்) எடுத்து, தொடாமாலிகை ஆபரணம்-தொடுத்தமாலையாகிய திருவாபரணத்தை, உனது அடியினில் சூடவே நாடும் மாதவர்கள்-தேவரீரது திருவடியில் சூட்டுவதையே தமது திருநெறித்

தொண்டாகக் கொண்ட பெரிய தவசிகளுடைய, இருபாதம் உளமது தரித்து-இருபாதங்களையும் அடியேனுடைய உள்ளத்தில் தரித்து இன் னாவோடு பாடி-இனிய நாவுடன் துதித்துப்பாடி, அருள்வழிபட-அடியேன் திருவருள் நெறியில் நிற்கவும், எனக்கே தயாவோடு தாள் உதவ-அடியே னுக்குக்கருணையுடன் தமது திருவடியைத் தந்தருளவும், உரகம் அது எடுத்து ஆடும்-பாம்பை தனது காலால் எடுத்து ஆடுகின்ற, மேகார மீதின் மிசை வரவேணும் - மயில் வாகனத்தின் மீது எழுந்தருளி வந் தருள்வீர்.

பொழிப்புரை.

அலைகளைவீசும் சமுத்திரத்தில் அணைகட்டிச் சென்று மிக வும் கொடிய செயலையுடைய இராவணனுடைய இரத்தினங்க ளிழைத்த கிரீடங்களோடு கூடிய அவனது தலைகளை யறுத்து வீழ்த்தி, தனது ஆருயிராக இருக்கும் சீதாதேவியை சிறைமீட்டு அழைத்துக் கொண்ட திருமாலை "மாமன்" என அழைக்கும் மருகரே! அறுகம் புல்லை சூடியுள்ளவரும், உலகங்களுக்கும் உயிர்களுக்கும் ஆதாரமாக இருப்பவரும், மழுமானைத் தரித்த வரும், மகாகாளிதேவி தோற்று நாணத்தை யடையுமாறு, (தேவர் மூவாதிகள் சேர்ந்துள்ள) சிற்சபையின்கண் முன்னு ளில் ஆனந்த அற்புதக் கூத்தாடுகின்றவருமாகிய சிவபெரு மானை "சிறப்புடைய தந்தையே" என்று அழைக்கும்வண்ணம் திருப்புதல்வராக வந்தவரே! பலப்பல அறிவுநூல்களைப் படித்து படிந்ததன் பயனாக உமது திருவருட் புகழை யோதுகின்ற புல வர்களது நாவினிடத்து உறையும் இரண்டு திருவடிகளைவுடைய வரே! விசாலமான புலமையை யுடையவரே! வேலாயுதரே! தினைப்புனத்தில் உயரமாகச் செய்துள்ள பரண்மிசை யிருந்த குறவர்மகளாகிய வள்ளிபிராட்டியாரது தோள்புணர அன்பு கொள்ளும் மணவாளரே! தாமரைகளோடுகூடிய வயல்களில் வளர்ந்துள்ள பாக்குமரங்களின் மீது வரால்கள் பாய்ந்து நித்தி ரைசெய்யும்படியாக நீர் பெருக்கெடுத்துவரும்காவிரிநதி சூழ வளம் பெற்றுள்ள பழநிமலைமீது எழுந்தருளியுள்ள பெருமையின் மிக்க வரே! தலைவலி, மருத்தீடு, காமாலை, சோகை, சுரம், கண்ணோய், வாட்சி, சூலை, சுவாசகாசம், நீர்கோப்பு, விஷப்பீடைகள் முதலிய பிணிகள் அடியேனை வந்து அடையாமலிருக்கவும், உலகத்தில் அந்நோய்கட்குரிய பேர்களையும் நோய்களின் வகைகளையும்

வைத்தியரிடம்கூறி இவற்றை நீக்கிவைக்க வேண்டுமென்னும் போது, அவர்கள் தமது மருத்துவச் செருக்கால் காதுகேளாதது போல் நடித்து, " தளர்கின்ற வயதை தளராவண்ணம் செய்வதற்கு என்ன பொருள் தருகிறீர் ?" என்று கேட்கும்படி அடியேனை விதிக்கா வண்ணமும், வாட்டமற மலர்க்காவிற் சென்று விருப்பத்துடன் வகைவகையாக மலர்களை எடுத்துத் தொடுத்த மாலையாகிய ஆபரணத்தை தேவரீரது திருவடிகளில் சூட்ட வேண்டுமென்று அன்புடன் எண்ணுகின்ற பெருந்தவசிகளுடைய பாததாமரைகள் இரண்டையும் அடியேனுடைய உள்ளத்தில் தரித்து, இனிய நாவினால் பாடி திருவருள் நெறியில் நிற்கவும், அடியேனுக்குக் கருணையுடன் உமது திருவடியைத் தருமாறும், பாம்பை எடுத்து ஆடுகின்ற மரகத மயில் மீது எழுந்தருளி வருவீராக.

விரிவுரை.

தலைவலி......அணுகாதே :---உடம்பினாலாய பயன் உடம்பிற்குள்ளுறையும் உத்தமனை யறிவதுவே ; அதற்குச்சாதனமாயுள்ள உடம்பு நோயின்றி யிருக்கவேண்டியதும் அவசியமே. ஆதலால், உடம்பிற்கு நோய்வராமல் இருக்க பவரோக வைத்தியநாதனிடமே முறையிடுகின்றார். நோய்வாய்ப்பட்டவர் இந்தப் பாசுரத்தை பக்தியுடன் ஓதி திருநீறு தரிக்க நோய்நிவர்த்தியாகும். நோய்வாய்ப்பட்ட குழந்தைகட்கு இத்திருப்புகழை யோதி திருநீறு கொடுக்க சுபமுண்டாகும். இது அனுபவசத்திற் கண்டது.

உலைவற ... ... பாலிகாபரணம் :—விருப்பத்தோடு "சிறையளி புகுதாமுன்னம் சிறகாலை எழுந்திருந்து" நந்தனவனஞ் சென்று வகை வகையாக மலரெடுத்து மாலைதொடுத்து பெருமானுக்குத் தரிக்கச்செய்வது மிகமிக மேலான தொண்டாகும். முருக நாயனார் சங்கிலியார் முதலியோர் இத்திருத்தொண்டின் வழிநின்று மீட்டிங்குவாராக்கதியைப் பெற்றார்கள்.

" துணக்கினன் மலர் தொடுத்தால் தூயவிண்ணேறலாகும்."
---அப்பர்.

" பூமாலை புனைந்தேத்தேன்" ---மாணிக்கவாசகர்.

"மாமலர்கள் கொண்டு மாலைகள் புனைந்து
மாபத மணிந்து பணியேனே."
---அருணகிரிநாதர்,

ஆதலால், இத்திருத்தொண்டைச் செய்யவேண்டுமென நினைக்கின்றவர்கள் திருவடியை உள்ளத்தில் தரிக்கவேண்டும் எனக் கல்மனமுங் கரைந்துருகுமாறு கூறினர்.

உளமது தரித்தே வினவோடு :---வினவோடு என்பதை வினை என்னும் பதமாகவே கொண்டு பொருளுரைப்பாருமுளர்.

உரகம நெடுத்தாடு மேகாரம் :---விந்து தத்துவமாகிய மயில் பிராணவாயுவாகிய பாம்பை மிதித்து ஆடுகின்றது என்பது அதன்தத்துவம்.

அலைகட லடைத்தோனை :---இராமசந்திரர் நானுவிதமான எண்ணங்களாகிய அலைகளை ஒழியாது வீசுகின்ற சமுசாரமாகிய சமுத்திரத்தை வைராக்கியமாகிய அணைகட்டி, காமக்ரோதாதிகளாகிய அசுரர்களை அழித்தனர்.

ஆழியில் அணைகட்டிய வரலாறு.

ஸ்ரீராமர் கடற்கரையில் தருப்பைகளைப் பரப்பி வருணனை நினைத்து கரத்தைத் தலையணையாக வைத்து கிழக்கு முகமாகப் படுத்தார். அயோத்தியில் நவரத்னமயமான தங்கக்கட்டிலில் நறுமலர்ச்சயனத்திலிருந்த அவர் திருமேனி பூமியில் படுத்திருந்தது. மனோவாக்கு காயங்களால் நியமமுள்ளவராய் மூன்றுநாள் தவமிருந்தார். மூடனுன சமுத்திரராஜன் இராமருக்குமுன் வரவில்லை. இராமருக்குப் பெருங்கோபம் மூண்டது. இலட்சுமணனை நோக்கி "தம்பி! இன்று சமுத்திரத்தை வற்றச்செய்கிறேன், மூடர்களிடத்தில் பொறுமையைக் காட்டப்படாது. வில்லைக்கொண்டுவா; திவ்வியாஸ்திரங்களையும் எடுத்துவா. சமுத்திரத்தை வற்றச்செய்து வாநரர்கள் காலால் நடந்துபோகச்செய்கிறேன்" என்று சொல்லி உலகங்கள் நடுங்க கோதண்டத்தை வளைத்து நாணேற்றி பிரளய காலாக்கினிபோல் நின்றார், அப்போது கடல் கொந்தளித்தது. சூரியன் மறைந்தான் ; இருள் சூழ்ந்தது, எரிகொள்ளிகள் தோன்

றின, மலைகள் நடுங்கின. மேகங்களின்றியே இடியும் மின்னலும் உண்டாயின. இராமர் பிரம்மாஸ்திரத்தை எடுத்து வில்லில் சந்தித்தார். இலட்சுமணர் ஓடிவந்து "வேண்டாம் வேண்டாம்" என்று வில்லைப்பிடித்துக் கொண்டார். பிரளயகாலம் வந்து விட்டதென்று தேவர்கள் மருண்டனர். உயிர்கள் "இனி உய்வு இல்லை" என்று அசைவற்றுக் கிடந்தன.

உடனே மேருமலையினின்றும் சூரியன் உதிப்பதுபோல், கற்பக மலர் மாலையுடனும் நவரத்ன மாலையுடனும் குழப்பமடைந்த மனத்துடன் வருணபகவான் "ராம ராம" என்று துதித்துக் கொண்டு தோன்றி, காலகாலரைப்போல் கடுங்கோபத்துடன் நிற்கும் ரகுவீரரிடம்வந்து பணிந்து, "ராகவரே! மன்னிப்பீர்; வானரசேனைகள் கடலைக் கடக்குமாறு அணைகட்டுகையில் அதனை அடித்துக் கொண்டுபோகாமல் நிலம் போல் நிற்கச் செய்கிறேன்" என்றான். இராமர் "நதிகளின் நாயகனே! எனது வில்லில் தொடுத்த இந்த அம்பு வீண்போகாது; இதை நான் எவ்விடத்தில் விடலாம்; சொல்லுக" என்றார். வடதிசையில் என்னைச் சேர்ந்த துருமகுல்யம் என்று ஒருதலமுள்ளது. அங்கே அநேக கொடியவர்கள் அதர்மத்தைச் செய்துக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள்மீது இக்கணையைவிட்டருள்வீர்" என்றுசொல்ல, இராமர். உடனே அக்கணையைவிடுத்தார். அக்கணை சென்று அந்த இடத்தைப் பிளக்க ரஸாதலத்திலிருந்து தண்ணீர் பொங்கியது. அவ்விடம் விரணகூபம் என்று பெயர் பெற்றது. அந்தப்பிரதேசம் மருகாந்தாரம் எனவழங்குகின்றது. அவ்விடம் "எல்லா நன்மைகளுக்கு உறைவிடமாயும் சகலவளங்களுமுடையதாயும் விளங்குக" என்று இரகுநாயகர் வரங்கொடுத்தார்.

பிறகு வருணன் இராமரைப் பார்த்து "சாந்தமூர்த்தியே! இவன் நளன் என்றவானரவீரன்; விசுவகர்மாவினுடைய புதல்வன்; தந்தைகுச்சமான மானவன்; தந்தையினிடம் வரம் பெற்றவன். இவ்வானரன் என்மேல் அணைகட்டட்டும். நான் தாங்குகிறேன்" என்று சொல்லி மறைந்தான். சிறந்த பலம் பொருந்திய நளன் எழுந்து இராமரைவணங்கி, "சக்கரவர்த்தித் திருக்குமாரரே! வருணன் கூறியது உண்மையே; விசாலமான இந்தக்கடலில் நான் எனது தந்தையின் வல்லமையைக் கைப்பற்றியவனும் அணை

காட்டுகிறேன், வீரனுக்குத் தண்டோபாயமே சிறந்தது; அயோக்கியர்களிடம் சாமம் தானம் என்பவற்றை உபயோகித்தல் தீமையே. இச்சமுத்திரராஜன் தண்டோபாயத்தினாலேயே பயந்து அணை கட்ட இடங்கொடுத்தான். வாநரவீரர்கள் அணைகட்டுவதற்கு வேண்டியவற்றைக் கொணரட்டும்'' என்றான்.

இராமர் அவ்வாறே கட்டளையிட, வாநரவீரர்கள் நாற்புறங்களிலும் பெருங்காட்டிற்சென்று, ஆச்சா, அசுவகர்ணம், மருதம், பனை, வெண்பாலை, கர்ணிகாரம், மா, அசோகம் முதலிய தருக்களை வேரோடுபிடுங்கிக் கொண்டுவந்து குவித்தார்கள். மலைகளையும் கற்குன்றுகளையும் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் கொணர்ந்தார்கள். சிலர் நூறுயோசனைதூரம் கயிறுகளைக் கட்டிப் பிடித்தார்கள். சிலர் அளவுகோலைத் தாங்கிநின்றார்கள். நளன் பெரிய அணையைக் கட்டலானான். பெரியபாறைகளும் மலைகளும் அக்கடலில் வீழ்த்தப்பட்டபொழுது பெருஞ் சத்தமுண்டாயிற்று. மனந்தளராத அவ்வாநரவீரர்கள் முதல்நாள் 14 யோசனைதூரம் அணைகட்டினார்கள். பயங்கரமான சரீரமும் பலமும் பொருந்திய வாநரர்கள் இரண்டாம் நாள் விரைவாக 20 யோசனை தூரம் அணைகட்டினார்கள். மிகுந்த பரபரப்பும் தொழில் செய்வதில் ஊக்கமுமுள்ள அவ்வாநரசிரேட்டர்கள் மூன்றாவது நாள் 21, யோசனைதூரம் கட்டினார்கள். நான்காவது நாள் 22 யோசனை தூரம் கட்டினார்கள். எல்லாத்தொழிலையும் விரைவில் முடிக்க வல்ல அவ்வாநரங்கள் ஐந்தாவதுநாள் 23 யோசனைதூரம் சுவேல மலை வரையும் அணைகட்டினார்கள். இவ்வாறு வெகுவிரைவில் அணைகட்டிமுடித்தார்கள். அவ்வற்புதத்தைப் பார்க்கவிரும்பி ஆகாயத்தில் தேவர்களும் கண்டு அதிசயித்தார்கள். மனத்தால் நினைக்கமுடியாததும் மயிர்க்கூச்சல் உண்டாக்குவதுமாகிய அச்சேதுவைப்பார்த்து எல்லாப்பிராணிகளும் இறும்பூதுற்றன.

அறுகினை முடித்தோனே :---சிவார்ச்சனைக்கு மிகவும் சிறந்தது அறுகு; அடியார்களால் அர்ச்சிக்கப்பட்ட அறுகைப் பெருமான் அன்புடன் முடித்துக்கொண்டிருக்கின்றார்.

'' மவுனவுப தேச சம்பு மதியறுகு வேணிதும்பை
மணிமுடியின் மீதணிந்த மகதேவர்.'
---திருப்புகழ்.

இவ்வறுகம் புல்லை விதிப்படி எடுத்து சிவபெருமானைப் பத்தியுடன் அர்ச்சித்தால் இனிப்பிறவா நிலையாகிய சிவகதியடைவர். இதனை மிகஅழகாக திருவருட்பிரகாச வள்ளலாராகிய இராமலிங்க சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியுள்ளதைக் கண்டு மகிழ்க.

BESANT

பகுதி தகுதி விகுதி எனும் பாட்டில்
இகலி லிடையை யிரட்டித்---தகவின்
அருச்சித்தான் முன்ன மதுகடையாங் கண்டீர்
திருச்சிற் சபையானைத் தேர்ந்து.

பொருள் :---பகுதி, தகுதி, விகுதி என்ற இம்மூன்று பதங்களின் இடையிலுள்ள "கு" என்ற எழுத்தை இரட்டித்தால், குகு, குகு, குகு, அறு கு ஆயிற்று இந்த அறுகைக் கொண்டு திருச் சிற்சபையிலுள்ள சிவமூர்த்தியை அர்ச்சித்தால் முற் கூறிய மூன்று பதங்களின் முதலெழுத்துக்களைக் கூட்டின் ப, த, வி, பதவி ; இந்திர பிரம விட்டுணுக்களின் பதவிகள், மேற்கூறிய பதங்களில் கடையெழுத்துக்களைக் கூட்டின் தி,தி,தி, ...முத்தி (பதவிகளுக்கு மேற்பட்ட சிவகதி) இந்த இரண்டும் எளிதில்சித்திக்கும்.

மாகாளி நாணமுனம் அவைதனில் நடித்தோனே:—

திருநடனவரலாறு.

திருவாலங்காட்டின் பெருமையைச் சிவபெருமானுற் சொல்லக் கேட்ட சுநந்த முனிவர், பெருமான் அருளியவண்ணம் தாண்டவ அருட்கோலத்தைக் காணவிழைந்து, திருவாலங்காடு சென்று தவமிழைத்திருந்தனர். கண்ணுதற் பெருமானது கைவிரலணியாகிய கார்க்கோடகன் திருவிரலில் விடத்தைக்கக்க, பெருமான் "நம்மைக் கருதாது தருக்குடன் நீ செய்த தீமைக்காகத் திருக்கைலையினின்று நீங்குக" எனப்பணித்தனர். நாகம் நடுநடுங்கிப்பணிய, சிவமூர்த்தி, "திருவாலங்காட்டில் அநேக ஆண்டுகளாக அருந்தவமியற்றும் சுனந்தருடன் சண்ட தாண்டவத்தைத்தரிசித்துப் பிறகு வருதி" என்று அருளிச்செய்தனர். கார்க்கோடகன் கருடனுக்கு அஞ்ச, எம்பெருமான் "இத்தீர்த்தத்தில் முழுகி அங்குள்ள முத்தி தீர்த்தத்தில் எழுக" என்று அருள்பாலிக்க, அரவு

அவ்வாறே ஆலவனம்வந்து சுநந்தரைக்கண்டு தொழுது தனது வரலாற்றைக் கூறி நட்புகொண்டு தவத்திருந்தது. சுநந்தர் நெடுங்காலம் தவத்திருப்ப, அவரைப்புற்று மூடி முடிமேல் முஞ்சிப்புல் முளைத்துவிட்டது. அதனால் அவர் முஞ்சிகேச முனிவர் எனப் பெயர் பெற்றனர். இதுநிற்க :

நிசும்பன் சும்பன் என்னும் அசுரர் இருவர் ஒப்பாருமிக் காருமின்றி பல தீமைகளைச் செய்துவந்தனர். அத்துன்பத்திற் கஞ்சிய தேவர்கள் உமாதேவியாரை நோக்கி அருந்தவம் செய்தனர், அகிலாண்டநாயகி அமரர் முன்தோன்றி, "உங்களைத் துன்புறுத்தும் அசுரரை அழிப்பேன்" என்று அருளிச்செய்து, மலைச்சாரலை யடைந்து தவவடிவத்தைக் கொண்டு உறைகையில், சண்டன் முண்டன் என்னும் அவுணரிருவர் அம்பிகையை யடைந்து, "நீ யார்? தனித்திருக்குங் காரணம் என்னை? சும்பனிடஞ்சேருதி" என்னலும், உமையம்மையார். "தவமியற்றும் யான் ஆடவர்பால் அணுகேன்" என்றுகூற, அவ்வசுரர் சும்பன் பாற் சென்று தேவியின் திருமேனிப் பொலிவைச்கூறி, அவனால் அனுப்பப்பட்ட படையுடன் வந்து அழைத்தும் அம்பிகை வாராமையால் வலிந்து இழுக்க எண்ணுகையில், இமயவல்லி சிறிது வெகுள, அம்மையார் தோளிலிருந்து அநேகஞ் சேனையும் ஒரு சத்தியும் தோன்றி, அசுரசேனையையும் சண்டனையும் முண்டனையும் கொன்றனர். உமாதேவியார் "சண்டனையும் முண்டனையும் கொன்றதனால் சாமுண்டி எனப் பெயர்பெற்று உலகோர் தொழ விளங்குதி" என அச்சத்திக்கு அருள் புரிந்தனர். அதனையறிந்த நிசும்பன் சும்பன் என்போர் வெகுண்டு ஆர்த்து அளப்பற்ற அசுரசேனையுடன் வந்து அம்பிகையை எதிர்த்து கணைமாரி பெய்தனர். அகில ஜகஅண்டநாயகி தனது உடலினின்றும் சத்த [illegible]ர்களையும் சிவதூதியரையும் உண்டாக்கி போருக்கனுப்பி, [illegible]ர்களால் அசுரசேனையை அழிப்பித்து, தாமேமுதலில் நிசும்பனையும் பிறகு சும்பனையும் கென்றருளினர்.

அவ்விரு நிருதர்கட்கும் தங்கையாகிய குரோதி என்பவள் பெற்ற இரத்த பீசன் என்று ஒருவன் இருந்தான். அவன் தனது உடலினின்றும் ஒருதுளி உதிரம் தரைமேல் விழுந்தால் அத்துளி தன்னைப்போல் தானவனுமாறு வரம் பெற்றவன். அவன்

இச்செய்தியறிந்து இமைப்பொழுதில் எதிர்த்தனன். அந்நிருதனுடன் சத்தமாதர்கள் சமர் செய்கையில், அவனுடம்பினின்றும் விழுந்த உதிரத்துளிகளினின்று அவனைப்போன்ற அசுரர்கள் பல ஆயிரம்பேர் தோன்றி எதிர்த்தனர். இவ்வற்புதத்தைக் கண்ட சத்தமாதர்கள் அம்பிகையிடம் ஓடிவந்து கூற, அம்பிகை வெகுள, அவர்தோளினின்றும் பெரிய உக்கிரத்துடன் காளி தோன்றினள். "பெண்ணே! யான் இரத்த பீசனைக் கொல்லும் போது உதிரத்துளி ஒன்றும் மண்ணில் வீழாமல் உன் கைக் கபாலத்தில் ஏந்தி குடிக்கக்கடவாய்" என்று பணித்து, இரத்த பீசனை அம்பிகை எதிர்த்து, காளி உதிரத்தைப் பருக இறைவியார் இரத்த பீசனை சங்கரித்தருளினர். இமையவரைத் தத்தம் இருப்பிடத்திற்கனுப்பிவிட்டு, காளியை மகிழ்வித்து அவளுக்கு சண்டி என்ற பெயரும் தெய்வீகமும் சிவபெருமானிடம் நிருத்தஞ்செய்து அவர்பக்கலில் உறைத்தலுமாகிய நலன்களைத்தந்தருளி, சத்த மாதர்கட்கும் அருள்புரிந்து மறைந்தருளினர்.

காளி அசுரர் உதிரங்குடித்த ஆற்றலாலும், உமையிடம் பெற்ற வரத்தாலும் இறுமாந்து ஊன்களைப்புசித்து, மோகினி இடாகினி பூத பசாசுகள் புடைசூழ ஒருவனத்திலிருந்து மற்றொரு வனத்திற்குப்போய் உலகம் முழுவதும் உலாவி, திருவாலங்காட்டிற்கு அருகில் வந்து அனைவருக்கும் துன்பத்தைச் செய்து வாழ்ந்திருந்தனர்.

ஒரு நாள் திருவாலங்காடு சென்ற நாரதமுனிவருக்குக் காளியின் தீச்செயலை கார்க்கோடக முனிவர் கூற, நாரதர்கேட்டுச் செல்லுகையில் காளிவிழுங்கவர, அவர் மறைந்து சென்று திருமாலிடம் கூறி முறையிட்டார். திருமால் சிவபெருமானிடஞ் சென்று "எந்தையே! காளியின் தருக்கையடக்கி யருளவேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்ய, முக்கட்பெருமான் "இப்போதே காளியின் செருக்கை யடக்க வடாரண்யத்திற்கு வருவோம்" என்று திருவாய்மலர்ந்து, சுநந்த முனிவர் கார்க்கோடக முனிவர்கட்குத் திருவருள் செய்யத் திருவுளங் கொண்டு திருவாலங்காட்டிற்கு வந்தருளினர்.

கூற்றையுதைத்த குன்றவில்லி வயிரவ வடிவு கொண்டமையின், உடன் வந்த பூதகணங்களுடன் காளியின் சேனை எதிர்த்து வலியிழந்து காளியிடம் கூற, அவள் போர்க்கோலந் தாங்கிவந்து, அரனரைக்கண்டு அஞ்சி "நிருத்தயுத்தஞ் செய்குதும்" எனக்கூற, கண்ணுதற்கடவுள் இசைந்து முஞ்சிகேச கார்க்கோடகர்கட்குத் தரிசனந்தந்து திருநடனத்திற்குத் தேவருடன் வந்தருளினர். அக்காலை அமரர் அவரவர்கட்கிசைந்த பலவாத்தியங்களை வாசித்தனர், அநவரதம், அற்புதம் ரௌத்ரம், கருணை, குற்சை, சாந்தம், சிருங்காரம், பயம், பெருநகை, வீரியம் என்னும் நவரசங்களும் அபிநயமும் விளங்க வாத்தியங்கட்கொப்ப பாண்டரங்கமாகிய சண்ட தாண்டவத்தைக் காளியுடன் அதியற்புத விசித்திரமாகச் செய்தருளினர்.

இன்சுவை பொழியுஞ்சாய லபினய மிலங்கச் செவ்வாய்
புன்சிறு முறுவல் பூப்பப் புணரவா னந்தம் பூரித்
தன்புறு மவையோருள்ள மயர்தர வியங்கட் கேற்ப
வின்படு நடனங்காளி யோடரன் விளைத்த காலை

மடிதரு முலக மென்ன வயங்கரு ணல்கி மெல்ல
அடிபெயர்த் தாடல் செய்ய அருகுறுங்காளி நோக்கி
ஒடிவுறு நாணின் மேவி யொளிமுக மிறைஞ்சி யொல்கி
வடிவுறு பாவைபோலச் செயலற மயங்கி நின்றாள்.

இவ்வாறு நடனஞ் செய்கையில், பெருமானது திருச்செவியிலிருந்த குண்டலமானது நிருத்த வேகத்தால் நிலத்தில் விழ, அதை இறைவரே திருவடி யொன்றினல் எடுத்துத் தரித்து ஊர்த்துவ, தாண்டவஞ் செய்ய, காளி செயலற்று நாணிப் பணிந்தனள். சிவபெருமான் "நீ இங்கு ஒரு சத்தியா யிருத்தி" எனத் திருவருள் புரிந்து, இருமுனிவரும், எண்ணில்லா அடியவரும் தமது தாண்டவத்திருவருட் கோலத்தை எந்நாளும் தெரிசிக்க ஆண்டு எழுந்தருளியிருந்தார்.

கருத்துரை.

திருமால் மருகரே! சிவகுமாரரே! புலவர் நாவிலுறையும் பொற்பாதரே! வேலாயுதரே! வள்ளிமணவாளரே! பழநியாண்டவரே! நோயற்ற வாழ்வையும் அடியார் பக்தியையும் அருள்வழி படவும் திருவடியை அடியேற்கு அருளவும் மயில்மிசை வந்தருள்வீர்.

உ

ஓம் குஹாய நம:

சிவானந்த லஹரீ

(ஆதிசங்கரர் அருளிச்செய்தது)

(234-வது பக்கத் தொடர்ச்சி).

          3   3   4
(25) ஸ்தவைப்ரஹ்மாதீநாம் ஜயஜயவசோபிர் நியமிநாம்
3   4   3   3
கணாநாம் கேளீபிர்மதகல மஹோக்ஷஸ்ய ககுதி ।
  2   3
ஸ்திதம் நீலக்ரீவம் த்ரிணயன முமாச்லிஷ்ட வபுஷம்
 3   4   3 2   3
கதா த்வாம் பச்யேயம் கரத்ருதம்ருகம் கண்ட பரசும் ॥

பதவுரை.

ப்ரஹ்மாதீநாம்	- பிரமன்முதலிய தேவர்களுடைய,
ஸ்தவை:	- துதிகளோடும்,
நியமிநாம்	- இருடிகளுடைய,
ஜயஜய சோபி:	- ஜயஜய என்ற வார்த்தைகளோடும்,
கணாநாம்	- நந்தி பிருங்கி சண்டி முதலான பிரமத கணங்களுடைய,
கேளீபி :	- (பாடல் முதலிய) விளையாடல்களோடு (கூடினவராயும்),
மத கல மஹோக்ஷஸ்ய	- பருமையினலழகிய இடபத்தினுடைய,
ககுதி	- திமிலில், (கொண்டையில்).
ஸ்திதம்	- இருக்கின்றவராயும்,
நீலக்ரீவம்	- நீலகண்டத்தை யுடையவராயும்,
த்ரிணயனம்	- மூன்று கண்களை யுடையவராயும்,
உமாச்லிஷ்ட வபுஷாம்	- பார்வதியம்மையாரால் தழுவப்பட திருமேனியை யுடையவராயும்,
கரத்ருதம்ருகம்	- திருக்கரத்தில் தரிக்கப்பட்ட மானை யுடையவராயும்,
கண்டபரசும்	- பரசு மழு எந்தின வராயுமிருக்கின்ற,
த்வாம்	- தேவரீரை,
கதா	- எப்பொழுது,
பச்யேயம்	- அடியேன் தெரிசிப்பேன்.

பொழிப்புரை.

பிரயாதி யமரர்களுடைய தோத்திரங்களாலும். முனிவர்களுடைய ஜய ஜய வென்னும் ஒலியினாலும், பிருங்கி முதலான பிரமதகணங்களின் ஆடல் பாடல் முதலிய கேளிக்கைகளாலும் மகிழ்ச்சியடைந்து, இடபா ரூடராய், நீலகண்டமும் திரிநேத்திர

மும், உமையொரு பாகமும், மான்மழுக்கரமும், உடையராய் விளங்கும் தேவரீரது திவ்ய மங்கள திருக்கோலத்தை தரிசிக்கப் பெறுவது என்றோ ?

"கண்டுறகடம்புடன் சந்தமகுடங்களுங்
கஞ்சமலர் செங்கையுஞ் சிந்துவேலும்
கண்களு முகங்களுஞ் சந்திர நிறங்களுங்
கண்குளிர என்றன்முன் சிந்தியாவோ."

---திருப்புகழ்.

3 3 3 4 4 3
(26) கதாவா த்வாம் த்ருஷ்ட்வா கிரிச தவ பவ்யாங்க்ரியுகளம்
3 4
க்ருஹீத்வா ஹஸ்தாப்யாம் சிரஸி நயநே வக்ஷஸி வஹன்|
4 3 4
ஸமாச்லிஷ்யாக்ராய ஸ்புடஜல ஜகந்தான் பரிமளா
4 3 3 3 4 3
நலப்யாம் ப்ரஹ்மாத்யைர்மத மனுப விஷ்யாமி ஹ்ருதயே||

பதவுரை.

கிரிச - மலையில் படுத்திருப்பவரே !
த்வாம் - தேவரீரை,
த்ருஷ்ட்வா - பார்த்து,
தவ - தேவரீருடைய-
பவ்யாங்க்ரி யுகளம் - நன்மையைச் செய்கிறவைகளான இரண்டுபாதங்களையும்,
ஹஸ்தாப்யாம் - அடியேனுடைய இருகரங்களாலும்,
க்ருஹீத்வா - பிடித்துக் கொண்டு,
சிரஸி - தலையிலும்,
நயநே - கண்களிலும்,
வக்ஷஸி - மார்பிலும்,
வஹன் - வகிக்கின்றவனான அடியேன்,
ஸமாச்லிஷ்ய - கட்டியணைத்துக் கொண்டு,
ஸ்புடஜல ஜகந்தான் - மலர்ந்த தாமரை மலரின் மணத்தை யுடையவைகளான,
பரிமளான் - நல்லவாசனைகளை,
ஆக்ராய - மோந்து,
ப்ரஹ்மாத்யை - பிரமன் முதலியவர்களாலும்,
அலப்யாம் - அடையக்கூடாத,
முதம் - சந்தோஷத்தை,
கதாவா - எப்போதுதான்,
அனுபவிஷ்யாமி - அனுபவிக்க போகின்றேனோ ?

பொழிப்புரை.

ஓ மலையில் சயனித்திருப்பவரே ! தேவரீரைத் தரிசித்து உமது இரண்டு பாததாமரைகளையும் அடியேன் கரத்தினுற் பிடித்து என் தலையிலும் கண்களிலும் மார்பிலும் ஒற்றித் தழுவிக்கொண்டு, பாததாமரையின் வாசனையை மோந்து, அயன் முதலிய அமரர்கட்கும் அடைதற்கரிய அளவில்லாத மகிழ்ச்சியை எப்போது அனுபவிக்கப் போகின்றேனே.

" நீபம் விளவினிள இலைதளவு குவளைகமழ் பவளநிற
வெட்சித் திருத்தாள் வணங்குவேனே."

---திருப்புகழ்.

(27) கரஸ்தே ஹேமாத்ரௌ கிரிச நிகடஸ்தே தனபதௌ
க்ருஹஸ்தே ஸ்வர்பூஜாமரஸுரபி சிந்தாமணி கணே |
சிர : ஸ்தே சீதாம்சௌ சரணயுகளஸ்தே (அ) கிலசுபே
கமர்தம் தாஸ்யே (அ) ஹம் பவது பவதர்தம் மம மன:||

பதவுரை.

கிரிச	- மலையில் படுத்திருப்பவரே!	க்ருஹஸ்தே	- உமது வீட்டிலிருக்கும்போது,
ஹேமாத்ரௌ	- பொன் (மேரு) மலையானது,	சீதாம்சௌ	- குளிர்ந்தகிரணங்களையுடைய சந்திரன்,
கரஸ்தே	- வில்லாகக் கையிலிருக்கும்போது,	சிரஸ்தே	- தலையிலிருக்கும்போது,
தனபதௌ	- இருநிதிக் கிழவனாகிய குபேரன்,	அகிலசுபே	- எல்லாமங்களங்களும்
நிகடஸ்தே	- அருகிலிருக்கும்போது,	சரணயுகளஸ்தே	- திருவடிகளிரண்டிலுமிருக்கும்போது,
ஸ்வரப்பூஜாமர ஸுரபி சிந்தாமணி கணே	- தேவலோகத்திலுள்ள மாரங்கள் (கற்பகத்தரு) தேவர்களின் பசு (காமதேனு)நினைத்ததைத் தரும் சிந்தாமணி இவைகளுடைய கூட்டமானது.	அஹம்	- அடியேன்,
		க :	- எந்த,
		அர்தம்	- பொருளை
		தாஸ்யே	- உமக்குக்கொடுக்கப்போகிறேன்,
		மம	- அடியேனுடைய,
		மன :	- மனதானது,
		பவதர்தம்	- உமது பொருட்டு,
		பவது	- ஆகட்டும்.

பொழிப்புரை.

ஓ மலையில் வாழ்பவரே! பொன்மேருமலையானது உமது திருக்கரத்திலும், தனபதியாகிய குபேரன் உமது பக்கத்திலும், கற்பகத்தரு காமதேனு சிந்தாமணி என்பவைகள் உமது திருமாளிகையிலும், சந்திரன் உமது சிரத்திலும், எல்லா சுபங்களும் உமது திருவடியிலும் இருக்கையில், எந்தப் பொருளை உமக்கு அடியேன் கொடுக்கவல்லேன். (உமக்குத்தரும் சிறந்த பொருள் யாதொன்றும் அடியேனிடத்தில் இல்லை) உம்மிடத்தில் இல்லாததும் அடியேனிடத்தில் இருப்பதுமாகிய என் குற்றமுள்ள மனதை நீர் பெற்றுக்கொள்வீராக

(தொடரும்).

உ

ஓம் குஹாய நம:

கந்தர் திருவிளையாடல்

(240-வது பக்கத் தொடர்ச்சி.)

சூர்பன்மனது தங்கையாகிய அசமுகி என்பவள் ஒருவனையுங்கல்யாணஞ் செய்துகொள்ளாமல் விரும்பிய ஆடவரைச்சேர்ந்து திரிந்துகொண்டிருந்தாள் அவள் பாவமேவடிவாக வந்தவள்; கற்பையும் தருமத்தையும் கனவிலும் நினையாதவள்; தேவர்களுடைய மனைவியரைத்தன் தமையன்மார்களுக்கு மனைவியராகக் கூட்டிவைப்பவள்; முனிவர்கள் செய்யும் வேள்விகளை கெடுப்பவள்; அசுரர்குலத்தையழிக்க அநீதியைச் செய்துகொண்டு உலாவுவாள்; அழகின்மிக்க ஆடவரை வலிந்துபுணருபவள். இத்தகைய அசமுகி துருவாச முனிவரையொருநாள் வலாற்காரமாகப்புணர்ந்தனள். அப்பொழுது அவளிடத்தில் வலிமைமிகுந்த "வில்வலவன்" "வாதாவி" என்ற இருபுதல்வரும் துருவாசரைப் பணிந்து, "தந்தையே! உமது தவம் முழுவதையும் எமக்குதந்தருளவேண்டும்" என்று கூற, முனிவர் "நான் அரிதிற் செய்த தவம் முழுதையும் தரேன், வேறுபொருளைக் கேளுங்கள் தருவேன்" என்றார். புதல்வர்கள் கோபமுற்று, "இப்பொழுதேஇவனைக்கொல்லுவோம்" என்றுவிரைந்தெழுந்தார்கள். துருவாசர் கோபித்து, "நீவிர் நாள்தோறும் முனிவர்கட்கு துன்பஞ் செய்துகொண்டிருந்து அகத்திய முனிவரால் அழியக்கடவது" என்று சபித்து மறைந்துபோயினர்.

வில்வலவனும் வாதாவியும் தாயார் சொற்படி முனிவர்களைக் கொல்லுதலையே பொருளாகக் கொண்டு, பிரமதேவரைக் குறித்து அக்கினியில் நின்று அளவற்ற காலம் தவஞ்செய்தனர். பிரமதேவருடைய தரிசனம் கிடைக்காமையால் வருந்தி வில்வலவன் தன் தம்பியாகிய வாதாவியைக் கொன்று இரத்தத்தையும் தசையையும் நெய்யும் அவியுமாக நெருப்பிற் சொரிந்து ஒருயாகத்தைச் செய்தான். பிரமதேவர் அவன் செயலைக்கண்டு வியந்து வந்து, "யாது வரம் வேண்டும்" என்ன, வில்வலன் பணிந்து, "என்தம்பி எழுந்திருக்க வேண்டும்" என்றான். நான்முகக் கடவுள் "வாதாவி எழுக" என்னலும் அவன் எழுந்தான். பிறகு வில்வலன் பிரமதேவரிடம் "ஆட்டினுருவங்கொண்ட என் தம்பி இன்னும் வெட்டுப்படுவானாயின், யான் 'தம்பியே எழுக' என்று அழைத்தால் எழுந்து வரல் வேண்டும்" என்றவரத்தைப் பெற்றான்.

பிறகு அவ்விருவரும் சூரன் முன் சென்று தமது வரலாற்றையும் வரம் பெற்றதையும் கூறி அவனைமகிழ்வித்து, குடகநாட்டிலே வளமைமிக்க ஒரு காட்டில் காற்சந்தியில் ஒரு ஆச்சிரமத்தை நிறுவி அதில் இருந்துவந்தார்கள்,

வில்வலன் ஒருமுனிவரைப்போல் உருவெடுத்து அவ்வழியில்வரும் முனிவர் களைப் பணிந்து உபசரித்து "உணவுக்கு வாரும்" என்று கொண்டுபோய் தம்பி யை ஆடாக்கி அறுத்துக் கறிசமைத்து முனிவரை உண்ணச் செய்து, பின் தம்பியைக் கூவுவான். உடனே வாதாவி உயிர் பெற்று எழுந்து தன்னை யுண்ட முனிவர் வயிற்றைக் கிழித்துவந்து, அம்முனிவரை இருவருமாக உண் ணும் வழக்கத்தை மேற்கொண்டு, முனிவர் கூட்டங்களை யெல்லாம் இந்தச் சூழ்ச்சியால் நாடோறும் கொன்று கொண்டிருந்தார்கள்.

சூரபன்மன் நாடோறும் இந்திரஞாலத் தேரின்மீதேறி, ஆயிரத்தெட்டண் டங்களினுஞ் சென்று அரசுசெய்துகொண்டிருந்தான் ஒருநாள் மேல்வருங்கேட் டையுணரானாய் இந்திரனைச்சிறை செய்து இந்திராணியைக் கவரநினைத்து, வீரரையும் வீரப்பெண்களையும் ஏவினான், இச்செயலைத் தூதராலுணர்ந்த இந் திரன்பயந்து இந்திராணியுடன் மறைந்து பூமியிற் சென்றான். சூரனால் ஏவப் பட்ட அசுரவீரரும் வீரப்பெண்களும் அமராவதிசென்றுஇந்திரனையும் இந்திராணி யையும் தேடிக்காணாராய் வருந்தி அங்குள்ள தேவரைகாட்டும்படி சித்திரவதை செய்தார்கள். அவர்கள் "யாம் அறியோம்" என்று புலம்பவிடுத்து, சூரனிடம் வந்து நிகழ்ந்ததைக் கூறினார்கள். சூரன் மணியை யிழந்த நாகம் போல் வருந்தி இந்திரனையும் இந்திராணியையும் தேடுமாறு பற் பல ஒற்றர்களை யேவினான். அவர்கள் உலகமெங்கும் தேடி திரிந்தவாராயி னார்கள்.

இந்திரன் நீங்கியதால் விண்ணுலகம் வளனழிந்து பொலிவிழந்து உயிர் நீங்கிய உடலை யொத்தது. தேவர்கள் புலம்பலோசை மிகுந்தது. இந்நிகழ்ச் சிக்கு முன்னரே இந்திரனுடைய தம்பியெனப்படும் உபேந்திரனாகிய விட்டுணு விண்ணுலகத்தினின்று வைகுண்டம் சென்றிருந்தார்.இந்திர குமாரனாகிய சயந் தன் தன் சிறிய பிதாவைக்காண வைகுண்டத்திற் சென்று சிலநாள் அங்கிருந்தான், பிதாமாதாக்கள் மறைந்ததையும் அசுரர்களின் கொடுமையை யுங்கேட்டு சயந்தன் மிகவும் மனவருந்தி, பொன்னுலகமுற்று தாய்தந்தைகள் மறைந்தேகியதையும் தேவர்களது ஆருத்துயரையுங்கண்டு கதறியழுதான். நாரதர் அவனையணுகி, இன்பதுன்பம் மாறி மாறி வருவது இயல்பே; சந்திர னுக்கு தேய்வும் வளர்வும் போல், உயர்வும் தாழ்வும் மாறி மாறிவரும் ; வருந்தா தே. விரைவில் சூரன் அழிவான்" என்றுதேற்றினர். சயந்தன் ஒருவாறு தேறி இருந்தான்.

மறைந்து போன இந்திரன் இந்திராணியுடன் தென் தேயத்திலுள்ள சீர்காழியை யடைந்து, திருநந்தனவனம் வைத்து பலவகைமலர்களை எடுத்து சிவபெருமானைப் பூசித்து வழிபாடு செய்துக்கொண்டிருந்தான், சூரபன்மன் விடுத்த ஒற்றர்கள் தன்னைத் தேடி வருவதை யுணர்ந்து மனைவியுடன் மூங்கில் வடிவாய் தவஞ்செய்துக் கொண்டிருந்தான், ஒற்றுவர் காணாது போயினர். அவுணர்கள் ஆணையால் மழை பெய்யாததால், அத்திருநந்தனவனம் வாடியது.

அதனை இந்திரன் கண்டு வருந்தி சிவபெருமானைத் துதித்தான். அப்பொழுது "இந்திரனே! வருந்தாதே! இத்தலத்திலே ஒரு நதிவரும்" என்று அசரீரி வாக்கு எழுந்தது, அதகேட்டு இந்திரன் மகிழ்ந்திருந்தான். இனி நதி வந்த வரலாற்றைச் சொல்லுவாம்.

பின்னிகழ்வனவற்றை முன்னறிகின்ற நாரதர் விந்தகிரிக்கு முன்னே சென்று ஆசி கூறி, "விந்தகிரியே! மேருமலை யானது, தான் சிவபெருமானுடைய வில்லாகிய வலியாலும், தன் மரபிலே உமாதேவியார் பிறந்தமையாலும், சந்திரசூரியர் முதலிய கிரகங்கள் தன்னை வலம் வருவதனாலும், தன்னொருபாகத்தில் திருக்கைலாய மலையை யுடையதாலும், மலையரசாக விளங்குவதாலும் செருக்குற்றுளது" என்று கூறினர். விந்தகிரி நகைத்து, "நன்று நன்று," நரசிங்கம் சரபத்தின் முன் பருக்கைக்கல் போல் உருண்ட இந்த மேருவுக்கு என்ன அகங்காரம் அதற்குமேல் நான் வளர்வேன்" என்று சத்தியவுலகம்வரை வளர்ந்து நின்றது. சந்திர சூரியர் தடைபட்டனர், தேவரும் முனிவரும் மிகவும் வருந்தி "அகத்தியமுனிவர் இங்குவந்தால் இவ்விந்தகிரி தருக்கழிந்து ஒடுங்கும்" என்று ஆராய்ந்து தெளிந்தார்கள்.

(தொடரும்).

உபதேசம்.

மாணவனே !!

அன்பென்பது உயிராகிய ஊற்றுமலையில் நின்று ("புத்திக் கமலத்துருகிப் பெருகிப் புவனத் மெற்றித் தத்திப்") பாய்கின்ற தெளி சுவை நறு நீர். அந்த நீரானது "பத்தித் திருமுக மாறுடன் பன்னிரு தோள்களுமாய்த் தித்தித்திருக்கும்" சிறிய சரும்புவளரும் உள்ளமாகிய வயலில் பாயவேண்டும். அதற்கு ஒரு வாய்க்கால் உண்டு அது பல மோழைகளுடையது. அன்பு நீரை இறைத்து வாய்க்காலில் விட அது மண் பெண் பொன் என்னும் பல மோழைகள் வழியாக பொசிந்து விடுகின்றன. கன்னல் வளர் செறிவை யடைய வில்லை அதுவுமன்றி வாய்க்காலில், கோபப் பெருங்கல்லும், மோகவேரும், மதமாச்சரியச் சருகுகளும் கிடந்து தடுக்கின்றன, ஆதலின் உடைக்கின்றது. நீ இப்படி பாழுக்கிறைத்து காலம் கழித்துவந்தனே. இனி மோழைகளை நன்றாயடைத்து தடைகளை யெடுத்து நீரை இறைத்து விடுவாயாக. அந்நறுநீர் நேரேயோடி கன்னல் வயலில்பாயும். அது முற்றிய வழிப் பேரின்பத்தேன் சொரியும். உண்ணலாம், உய்யலாம்.

ஓம் குஹாய நம :

கற்பு

(245-வது பக்கத் தொடர்ச்சி).

கணவன் மனைவியை நடத்தும் முறை

பெருந்தன்மையுள்ள மனைவிகள் தங்களுக்குள்ள ஏற்றமெல்லாம் தங்கள் கணவன் மார்களினாலேதான் உண்டாகின்றன வென்பதை நன்குய்யறிந்து கொண்டு, அவர்களது நன்மைக்கென்று இரவும் பகலுமாக வருந்திப் படாத பாடுகளெல்லாம் படுவார்கள், உள்ளே பகைகொண்டு வெளியே மகாபதி விரதைகள் போல் எல்லோருக்கும் தெரியும்படி டம்பத்துக்காகப் டர்த்தாவுக்குப் பணிவிடை செய்யமாட்டார்கள்; உள்ளன்புடன் செய்வார்கள். இப்படி மனைவி தன்கணவன் கண்டுகளிக்க வேண்டுமென்று எவ்வளவு பாடுபட்டும் சிலர் தோஷத்திலேயே கண்ணும் மனைவியிடத்தில் எப்பொழுதும் குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலேயே கருத்தைச் செலுத்துகின்றனர். ஆண்கள் மனைவியிடத் தில் இப்படிக்குற்றம் பார்ப்பதையே தொழிலாகக் கொண்டிருந்தால் அந்தக் குடும்பத்தில் எந்தக்காலத்தில் தான் சமாதானமுண்டாவது? அறிவுடை யவர்கள் ஒன்றினுள்ள குணத்தை யறியவேண்டுமாயின் அதனிடத்தில் விருப்பு வெறுப்பின்றி யிருக்கவேண்டும். ஏனெனில் ஒருபொருளிடத் தில் வெறுப்பிருக்கின் குணந்தோன்றாது; விருப்பிருக்கின் குற்றந்தோன் றாது. ஒருவனுக்கு வேண்டாப் பெண்டானவள் அவன் விஷயத்தில் அன்போடு என்னசெய்தாலும் அவையனைத்தும் குற்றமென்றுதான்படும். அவள் ஒருவித மாகச் சமைத்தால் அன்று வேறுவகையான உணவை விரும்புவான்; அவன் குளிரினால் வருந்துகையில் அவள் கம்பளங்களைக் கொண்டுவந்தால் அவற்றை வாங்கி யெறிந்து விட்டு சல்லாவைப் போர்த்திக் கொள்ளுவான்; வீட்டில் காற்றில்லாமல் வெயர்வை யுண்டாகையில் அவள் வீட்டின் பலகணி களையும் கதவுகளையும் திறந்துவைத்தால் அவன் அவற்றை மூடிவைப்பான் காற்று அதிகமாகவீசி மண்ணைவாரி கொட்டுகையில் அவள் ஜன்னற் பலகை களை மூடினால் இவன் திறந்து வைப்பான்; இவ்வாறே எந்தக் காரியத்திலும் நேர்மாறாக சிலகுடும்பங்களில் நடந்தவருகிறது. மனைவி ஒன்று செய்தால் கண வன் ஒன்று செய்வது. இப்படியே சிறிதுகாலம் குடும்பத்தில் நடந்து வந்தால் பின்பு "தென்றல்முற்றிப் பெருங்காற்றாயிற்று" என்றவண்ணமாய் அவ்வீட்டில் நாள் செல்லச் செல்ல பெருங்கலகங்கள் முற்றிவிடும். இவ்வாறே பெருங்கலகங்

கள் முற்றிவெட்டுக் குத்துச் சண்டைகளும் நடப்பதுண்டு. ஆதலால் அறிஞர்கள் அறிவினால் ஆரம்பத்திலேயே கலகத்திற்கு ஆதாரமானவைகளைவேருடன் களைந்து இன்ப வாழ்வை நடத்த முயலுதல்வேண்டும்.

இல்வாழ்க்கையில் குற்றங் கண்டுபிடிப்பதே தீதாகும். எவ்வளவு சாக்கிரதையாக இருக்கினும் சிறுகுற்றங்கள் வந்தேதீரும். அச்சிறுகுற்றங்களை இனிமையாக எடுத்துச் சொல்லி திருத்தவேண்டும். "நெல்லிற்கு உமியுண்டு ; நீர்க்கு நுரையுண்டு ; புல்லிதழ் பூவிற்கு முண்டு" என்பதுபோல் குற்றமில்லாதவரே உலகில் இருப்பது அரிது ; இறைவன் ஒருவர்தான் குற்றமற்றவன். ஆதலால் குற்றமற்றோர் எவருமில்லை, எனவே மிகவும் நெருங்கிய உறவுடைய கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் குற்றம் பார்க்கலாகாது. ஆண்களிற்சிலர், "ஐயோ ! இந்தப் பிடாரியைப் பெண்டாகக் கொண்டேனே ?" என்றும், பெண்களிற் சிலர், "ஐயோ ! என்தலையில் இப்படியும் ஈசன் எழுதிவைத்தானே ? இந்தப்பாவிக்கு வாழ்க்கைப்பட்டேனே ?" என்றும் தம்முள்ளே நினைத்து மனம் இடிவதுமுண்டு. ஆதலால், கணவனும் மனைவியும் குற்றம் கண்டு பிடிக்கும் வழக்கத்தை அறவே விடுத்து ஒருவரை ஒருவர் நேசித்து இல்லறநெறியில் உயிரும் உடலும் போல ஒத்துநடக்கவேண்டும்.

ஒருத்தி எவ்வளவுதான் கெட்டவளாயிருந்தாலும் கணவன் தனது புத்தியாலும் யுக்தியாலும் தந்திரமாக அவளை சிலநாளைக்குள் நற்குணவதியாகச் செய்துவிடலாம். சாந்தமாகவே மனைவியைச் சீர்திருத்தவேண்டும். ஒரு மூங்கிலை வளைப்பதானால் மெல்ல வளைக்கவேண்டும் ; வேகமாக வளைத்தால் மூங்கில் இடையில் முறிந்துபோம். அதுபோல் முரட்டுகுணமுடைய மனைவியை அறிவுடைய ஆடவர்கள் தக்கமுறையில் நல்வழிப்படுத்த வேண்டும். சிலசமயத்தில் கணவனுக்கு அளவுக்கு மீறிய கோபம் வரின் அதனைத் தனது அறிவைக்கொண்டு அடக்கவேண்டும். "ஆறுவது சினம்" என்ற நன்மொழியை நினைவுக்குக் கொண்டுவந்து தணிந்த சிந்தையைப் பெறவேண்டும். அப்படியின்றி சிலர் கோபத்திற்கு அடிமையாகி தன்னையே தஞ்சமென்று வந்துள்ள மனைவியரை ஆடுமாடுகள் போல் எண்ணி கையில் கிடைத்தவைகளைக் கொண்டு நையப்புடைக்கின்றனர் ; பரிதாபம்.

சில ஆடவர்கள் தங்கள் குடும்பத்திலுள்ள எல்லாவேலைகளையும் பெண்கள் தான் பார்க்க வேண்டும் என்றும், "வீட்டில் நிழலில் இருக்கும் பெண்களுக்கு என்ன சிரமம் ? வெளியில் சென்று பாடுபட்டுவரும் ஆண்மக்களுக்குத் தான் அதிக சிரமம். பாடுபட்டுத்தேடிக் கொண்டுவந்து கொடுத்ததை சமைத்துப்போடுவதும் குழந்தைகளைப்பார்த்துக் கொள்வதுந்தானே ?" என்று வாய்க்கு இலேசாகச் சொல்லுகிறார்கள். பெண்களுக்கு ஒருவித சிரமமுமில்லை என எண்ணி இருக்கிறார்கள். அந்த எண்ணத்தை மாற்றிக்கொள்ள வேண்டும்.

ஒருவன் பகல்முழுதும் வயலில் வேலைசெய்துவிட்டு அந்தி நேரத்தில் வீட்டுக்குவந்தான். வரும்போதே அவனுக்குண்டான கோபம் கொஞ்சமல்ல; தன் மனைவிக்கு வீட்டில் வேலையே கிடையாது யென்பதும், அவள் சும்மா உறங்கிக்கொண்டிருக்கிறாள் என்பதும், அவளைவிட மூன்றுமடங்கான வேலையைத்தான் செய்யவல்லவன் என்பதும் அவன் நெடுநாளாகக் கொண்டிருந்த கருத்து. அவன் வீட்டுக்கு வந்ததும் தன்னையே பெருமையாக நினைத்திருந்தவனாதலால் மனைவியைக் கண்டு மிகவும் எரிந்து வீழ்ந்தான். அவன் மனைவி மிக்க அறிவுடையவள்; பொறுமைக்கு உறைவிடம், அவள் தன் கணவனை நோக்கி, "பிராணநாயகா! நான் வீட்டில் இந்தக் குழைந்தைகளோடு படுந்துன்பம் கொஞ்சமல்ல; தாங்கள் இருந்து பார்த்தால் தெரியும். ஒரு குழந்தை ஆகாயத்திலிருக்கிற சந்திரனைப்பிடித்துக் கொடுக்கச் சொல்லியழுகிறது; மற்றொன்று கிடைக்காத பொருள் வேண்டுமென்று அழுகிறது. இந்தக் குழந்தைகளுக்குச் சமாதானம் பண்ணிக் கொண்டே சமைக்கவேண்டும். இதை நீர் கவனிக்காமல் என்னை துர்வசனத்தால் வைவது தருமமா?" என்று கூறினாள். அவன் அதுகேட்டு, அறிவில்லாதவளே.! இந்தக் குழந்தைகளை வைத்திருப்பதும் உப்பில் புளியைக்கரைத்து விடுவதும் என்ன பிரமாதமா? என்மாதிரி ஒருநாளைக்கு வெளியில் சென்று உன்னால் உழைக்க முடியுமா?" என்றான், மனைவி, "நாயகா! அடியாள் செய்யவேண்டிய வேலையை நீர் செய்யும்; நீர் செய்யவேண்டிய வேலையை நான் செய்கிறேன். இது தங்களுக்குச் சம்மதமாயிருந்தால், நாளைமுதல் மாற்றிக்கொள்வோம். உமக்குப்பதிலாக நான் ஏர் பிடித்து உழுகிறேன்; நீர் காலையிலெழுந்து சாணந்தெளித்தல் முதல் இரவில் குழந்தைகளுக்குப்படுக்கையிட்டுப் படுக்கவைத்து வீடு கழுவிவிட்டு அன்னத்திற்கு நீர் கொட்டி வைத்தல்வரைப்பார்த்துக்கொள்ளும். இதற்கு இடையில் வீட்டிலுள்ள வேலைகளை கவனித்துக்கொண்டே கன்றை ஊட்ட விட்டுப் பாலைக்கறக்கவேண்டும்; தயிரைக் கடைந்து வெண்ணெயெடுக்கவேண்டும், பாலைக்காய்ச்சிப் பதத்தில் பிறைவார்த்து தோய்க்கவேண்டும். குழந்தைகளை வெளியே போகாவண்ணமும் அடுத்த வீட்டுப்பிள்ளைகளுடன் சண்டைபிடிக்காவண்ணமும் பார்த்துக்கொள்ளவேண்டும்; குழந்தைகள் பண்டங்களைக் கொட்டுதல் மண்தின்றல் முதலிய துடுக்குகளைச் செய்யாவண்ணம்பாதுகாத்துக் கொள்ளவேண்டும். கைக்குழந்தையை அழாமல் எடுத்துவைத்துக் கொள்ள வேண்டும், கூலியாட்கள் ஏமாற்றிவிட்டுப் போகாவண்ணம் அவர்களிடத்தில் அவ்வப்போது வேலைவாங்கிக்கொள்ளவேண்டும்; மத்தியானம் நான்வருவதற்குள் உணவுசித்தமாயிருக்கவேண்டும்; பிற்பகலில் அரிசி முதலிய தான்யங்களில் கல்லில்லாதபடி சுத்தமாக நோம்பி வைக்கவேண்டும்; கிழிந்த துணிகளைத் தைத்து வைக்கவேண்டும்; துணிகளைச் சுத்தமாகத் தோய்த்து உலரவைக்கவேண்டும்; இரவு போஜனத்திற்கு ஆகும்படி அப்பளம் முதலியவைகளைத் தயாரித்து வைக்கவேண்டும்; மாலைநேரத்தில் வீடுவாசலைக் கூட்டித் தண்ணீர் தெளித்து கோலமிட்டு விளக்கேற்றி வைக்கவேண்டும்; காலையில் குழந்தைகளைத் தனித் தனியாகக்குளிக்கவைத்து துடைத்து திருநீறிட்டு

உணவு தந்து பள்ளிக்கு அனுப்பவேண்டும் ; நான் இரவில் உணவுக்கு வந்தால் நான் எப்படி உங்களுக்கு சோடசோபசாரமாக உணவு தந்து உபசரித்தேனோ அப்படி நீர் எனக்குச் செய்யவேண்டும் ; நான் நீர் செய்யும் வேலையெல்லாம் செய்து வேர்த்து இளைத்து வருவதால் படுக்கைப்போட்டு என்னை படுக்க வைத்து பாத்திரங்களை யலம்பி வைத்துவிட்டு, பண்டங்களை எலிகள் தின்னு வண்ணம் மூடிவைத்துவிட்டு; சமையலறையை அலம்பிவிட்டுப் படுக்க வேண்டும் ; அவ்வப்போது குழந்தைகள் அழும்போதெல்லாம் தின்பண்டங் களைக் கொடுத்து மகிழச் செய்யவேண்டும் ; இரவில் குழந்தைகளை சிறுநீருக்கு எழுப்பிவிடவேண்டும் ; இன்னும் வீட்டிலுள்ள வேலைகள் அனைத்தையும் பார்த்துக்கொள்ளவேண்டும்" என்றாள். அவனும் அதற்கு சம்மதித்துப் பொழுது விடிந்ததும் அவ்வாறு செய்ய எண்ணினான்.

மறுநாள் விடிந்த பின்பு அவள் வயலுக்குச் சென்றாள். அவன் பாற் கலயத்தை எடுத்து பால் கறக்கப்போனதில் பசு உதைத்து பாற்சொம்பைக் கவிழ்த்துவிட்டது. பாலில்லாமையால் கைக்குழந்தை மோகன முகாரி ராகம் உச்ச சுரத்தில் பாடத்தொடங்கியது, தயிர்கடைய ஆரம்பித்தான் மத்து பட்டு தயிர்சட்டி உடைந்துவிட்டது. அடுப்பைமூட்டி உலையைவைத்து சோறாக்க முயன்றான். ஒருபக்கம் வெந்ததும் ஒருபக்கம் வேகாமலும் ஆகிவிட்டது, கஞ்சிவடிக்கும்போது கஞ்சி கைமேல் விழுந்துவிட்டது. உடனே அவனுக்குக் கோபம்பொங்கிஎழுந்தது, தண்ணீரை எடுத்து அடுப்பில் கொட்டிவிட்டு "இந்தச் சனியன் பிடித்த வேலையேவேண்டாம்" என்று எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டான். குழந்தைகள் தெருவில் ஓட ஆரம்பித்தது. அதைகண்டு ஒருதடி எடுத்து நைய அடித்தான். வெளியில்போய் பால் விலைக்கு வாங்கி வந்துவைத்து கைக்குழந்தையை எடுக்கப்போனான் அதற்குள் பூனைவந்து பாலை உருட்டிவிட்டது. கைக்குழந்தையை எடுத்துவரும்போது அது மலஜலம் விட் டது ; உடனே கோபம்வந்துவிட்டது "பட்டினியாகக் கிடந்து சாகு" என்று தொட்டிலிலேயே போட்டுவிட்டான் ; குழந்தைகள் வந்து சாப்பாடு கேட்டார் கள். அவனுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை ; அவனுக்கும் பசி அதிகம், தொட்டிலில் குழந்தை ஒருபுரம் அழுகிறது; என்ன செய்வான்பாவம். அந்த நேரத்தில் ஒரு ஏழை "அம்மா பிச்சை" என்று அழைத்தான். அவன் கோட்டானைப்போல் விழித்துக் கொண்டிருந்தான். உச்சி நேரமாயிற்று ; அவன் மனைவி வயலிலிருந்துவந்தாள் ; வீட்டின் அலங்கோலத்தைப் பார்த் தாள் ; கணவன் விழிப்பதையும் குழந்தைகள் பசிக்கு அழுவதையும் பார்த்தாள்; ஒன்றும் பேசவில்லை, தன்கணவனை அகமலர்ச்சி முகமலர்ச்சியுடன் பார்த்து, "இதோ ஒருநொடியில் சமைத்து பசியை யாற்றுகிறேன்" என்று வீட்டைக் கூட்டி, அடுப்பைமூட்டி வீட்டிலுள்ள வேலைகளை யெல்லாம் பம்பரம்போல் வெகுவிரைவில் செய்துமுடித்துவிட்டாள் ; கைக்குழந்தைக்குப்பாலூட்டினாள் ; கணவனை வணங்கி "உணவுக்கு வாருங்கள்" என்று அழைத்து கணவனையும் குழந்தைகளையும் இருக்கவைத்து நல்லுணவுதந்தாள் ; கணவன் சாப்பிட்டு

283

உ

ஓம் குஹாய நம :

யோக சூத்திரம்

பதஞ்சலி முனிவர்.

ஆர். வெங்கடநாராயண சர்மா, வைத்தியர்.
பொத்தனூர்-வேலூர், சேலம் ஜில்லா

(254-வது பக்கத் தொடர்ச்சி).

21. தீவிர அப்பியாச வைராக்கியமுள்ளவர்களுக்கு முக்தி நிலை அதி சமீபத்திலுள்ளது.

22. மிருது, மத்திமம், அதிமாத்திரை என்றவேகங்களில் முந்தியதை விடப்பிந்தியது விசேஷ மானது.

எழுமுன் கணவன் சயனிக்கப்படுக்கைவிரித்து வைத்தாள். இவைகளை யெல்லாம் கண்ட அவன் பிரமித்துவிட்டான். "ஆகா! இவள் இத்தனை வேலைகளையும் செய்து நம்மையும் உபசரிக்கின்றாளே? நம்மைவிட மூன்று மடங்கு வேலைசெய்கிறாள்; பாவம்! இந்தக்குழந்தைகளோடு நம்மால் ஒருநாள் இடமுடியுமா? இவளை நாம் இத்தனை நாள் என்னவேலை செய்கிறாய்? என்று வைதுவிட்டோமே?" என்றெல்லாம் தனக்குள் நினைத்து, அன்றுமுதல் மனைவியிடம் மிக்க அன்பாயிருந்துவந்தான். கடிந்துபேசுவதை அறவே விடுத்து மணமும் மலரும்போல் கருத்தொருமித்து இன்பவாழ்க்கை நடத்தி வந்தான்.

ஆதலால், வீட்டு வேலைகளை யெல்லாம் பெண்மக்கள் பார்ப்பதால் தானே ஆண்மக்கள் வெளியிற்போய் சம்பாதித்து வருகிறார்கள். ஆனபடியால், தன் வருவாய்க்குப் பாதிகாரணம் மனைவிக்குமுண்டு. என்று நினைத்து மனைவியை அடிமையாக நினைத்து ஆடுமாடுகளைப்போல் கேவலமாக நடத்தாமற்படிக்கு தன்னுடைய உடம்பில் பாதி என்று எண்ணி இனியவசனங்களால் அவளுக்கு இன்பத்தைத்தந்து மனமொத்து வாழவேண்டும்.

---(தொடரும்.)

23. ஈசுவர ஆராதனத்தால் சமாதி சித்திக்கின்றது.

24. மூக்காலங்களிலும் கிலேச, கர்ம, விபாக. ஆசயங்களுக் கப்பாற்பட்ட புருஷவிசேஷன் ஈச்வரன்.

25. எல்லாவற்றையும், அறியவும், செய்யவும் உள்ள சக்தி யானது, அந்த ஈசனிடத்தில் ஒப்புயர்வற்றது.

26. அந்த ஈஸ்வரர், காலஎல்லைக் கப்பாற்பட்டவராதலால், பழமையான பிரமாதிகளுக்கும் குருவாகவுள்ளவர்.

27. அவருடைய பெயர் பிரணவம்.

28. அந்தப் பிரணவத்தை ஜபித்தலும், அதின் பொருளை பாவித்தலும் வேண்டும்.

29. இந்தப் பிரணவத்தியானத்தினால், தேகாதிகளுக்கு வேறான தன்னுடைய உண்மை ஞானமுண்டாகி, வியாதிமுதலிய தடைகள் நீங்குகின்றன.

30. 1. வியாதி, 2. மனவூக்கம், 3. சந்தேகம், 4. பிரமாதம் 5. ஆலஸ்யம், 6. வைராக்கிய மில்லாமை, 7. மயக்க முடைமை, 8. முயற்சிச்குறைவால் யோகத்தை யடையாமை, 9. சமாதி நிலையி னின்று நழுவுதல் ஆகிய இவைகள் மனத்தை யோகத்தில் சேர விடாமல் செய்கின்ற தடைகள்.

31. துச்கம் மனோபலமில்லாமை, சரீரநடுக்கம், உஸ்வாஸம் நிஸ்வாஸம், ஆகிய இவைகளும் மனோவிகாரத் தடைகளே.

32. அவற்றின் நிவர்த்திக்காக, ஒருவஸ்துவான தத்துவத் தை அப்பியாசிக்கவேண்டும் (தெய்வஉருவ வழிபாடு.)

33. சுகதுக்கங்களுக்குக் காரணமான புண்ய பாபவினை களையுடையவர்களிடத்தில், சிநேகம், கருணை, சந்தோஷம், உபே க்ஷை என்ற பாவங்களை (சிந்தனங்களை) ச் செய்ய, சஞ்சல சித்த மானது தெளிவைபடையும்.

34. பிராணனுடைய போக்கு வரவான நட்பை இயற்கை முறையில் கவனத்துடன் பழகுவதால், சஞ்சலம் நீங்கித் தெளி வுண்டாகும்.

35. யோகப்பயிற்சிக்குச் சாதனமான விஷயங்களிலுள்ள முயற்சியானது, மனதை ஒருமையில் நிலைக்கச்செய்யும்.

36. சோகமற்ற ஜோதிஷ்மதீ யென்ற சுத்த ஸாத்வீகப் பிரகாசத் தியானம், சமாதிகூட்டும், (இரத்தினங்கள் போன்ற ஒளிகளும்).

37. ஆசையற்ற சித்தமுடைய மஹாபுருஷர்களைத் தியானிப்பதால் சித்தம் ஒரு நிலைப்படும். (முனிவர்களின் சித்தங்களை குணங்களை).

38. கனவு தூக்கங்களிலுள்ள ஞானத்தை சிந்திப்பதால் சமாதி கூடும்.

39. எது உனக்குப் பிரியமோ அதைதியானிப்பதாலும் சமாதி கூடுகிறது.

40. இவ்விதமாய் ஸ்தூல சூட்சும தியானங்களிற் பழகித் தேர்ந்தவருக்கு, பரமாணுமுதல் பரம மஹத்துவரை சித்தத்தில நினைத்தபடி நிற்கும் சுவாதீன முண்டாகும்.

41. எண்ணங்கள் குறைந்த சித்தமானது, ஆத்ம இந்திரிய விஷயங்களிடத்து, (மனம், வாக்கு, காயங்கள்) சுத்தஸ்படிக மணியைப்போல ஏகிபாவத்தை யடைந்த ஸமாபத்தியைப் பெறுகின்றது.

42. அவற்றில்---சப்தார்த்தஞான விகற்பங்களுடன் நடைபெறும் தியானம், ஸவிதர்க்க ஸமாபத்தியாகும்.

43. இந்திரிய விஷயங்களின் எண்ணங்கள் நீங்கி, தனக்குரிய ரூபமில்லாதது போல, அர்த்தமாத்திரமாய்ப் பிரகாசிக்கும் தியான நிலைமைக்கு நிர்விதர்க்க ஸமாபத்தீ யென்று பெயர்,

44. மேற்கண்ட ஸவிதர்க்க நீர்விதர்க்க ஸமாபத்திகளைக் கொண்டே, சூட்சுமமான ஸவிசார நிர்விசார ஸமாபத்திகளும் கூறப்பட்டனவாகும். (பஞ்சதன்மாத்திரை முதல்மூலப் பிரகிருதிவரை.)

45. இப்படி சூட்சும விஷய ஸமாபத்தியும், (குறியற்ற) மூலப்பிரகிருதியுடன் முடிவடைகிறது.

46. முன்கூறப்பட்ட ஸமாதிகளெல்லாம் (மறுபடியும் முளைப்பதற்காகும் விதையான) பீஜஸமாதிகளே.

47. நிர்விசார ஸமாபத்தியில் சாமர்த்தியமுள்ளவனுகும் பொழுது, அத்யாத்மப்பிர ஸாதம் உண்டாகிறது.

48. இந்நிலையிலுள்ள பிரக்ஞைக்கு "ரிதம்பரா" என்று பெயர்.

49. சுருதி அனுமானங்களையுடைய அறிவைக்காட்டிலும்' விசேஷமான அர்த்தத்தினுலே (உணர்வினுலே) இந்தப்பிரக்ஞை யானது வேருனது.

50. இந்த 'ரிதம்பரா' பிரக்ஞையிலிருந்துண்டாகும் ஸமஸ்காரமானது (ஊழ்) புருஷஸாக்ஷாத்காரத்திற்குத் தடைகளா யுள்ள வேறு ஸம்ஸ்காரங்களைத் தடுக்கும் வல்லமையுள்ளது.

51. இந்த ஸமஸ்காரங்கள் தடுக்கப்படும்பொழுது, எல்லா ஸமஸ்காரங்களும் தடுக்கப்பட்டனவாகி, நிர்பீஜ ஸமாதியைப் பெறுகிருன்.

முதல் ஸமாதிபாதம் முற்றும்.

(மங்களம்).

---(தொடரும்).

வினு விடை மணிகள்

(ஆதி சங்கரர்.)

வினு:---ஜன்மத்துக்குக் காரணம் யாது?
விடை;—விஷயத்தில் பற்று.
வினு;---மேல் ஜன்மம் எது?
விடை:---புத்திரன்.
வினு:---பரிகாரம் செய்ய முடியாததுஎது?
விடை:---எமன்.
வினு;.--காலை எங்கே வைக்க வேண்டும்?
விடை:---கண்ணுல் பரிசுத்தி செய்யப்பட்ட இடத்தில். (பிராணிகளுக்கு இம்சை செய்யும்படி காலை வைக்கக்கூடாது)-

ஓம் குஹாய நம :

குமரகுருபர ஸ்வாமிகள் சரித்திரம்.

ஏ. எம். நாராயணசாமி அய்யர், மதுரை.

(258-ம் பக்கத் தொடர்ச்சி.)

அவ்வமயம் மாசிலாமணித் தேசிகர் சைவ சித்தாந்த சாஸ்திரங்களேயும், அவற்றிற்குறிய அங்கங்களாயுள்ள நூல்களேயும் ஐயம் திரிபு அற ஓதியுணர்ந்து குருபக்தியிற் சிறந்துவிளங்கும் அடியார் திருக்கூட்டங்களும், வேதாகம விற்பன்னர்களும், சைவசிவாசிரியர்களும், இலக்கிய இலக்கணங்களில் வல்ல வித்வான்களும் புடைசூழ முன்னம் முக்கட் பிரான் நாற்றிசைக்கும் கைகாட்டி சனகாதி முனிவர்கட்கு ஞான உபதேசம் செய்ததைப் போல் தென்றிசை நோக்கி யமர்ந்து. அருளும், அன்பும், ஞானமும் தயையும், ஒழுகும் முகத்துடன், அடியார்களுக்கு ஞானுபதேசம் செய்து கொண்டு இருக்கக்கண்டு, அவர் முன்படைந்து அடிபணிந்தார். அருட்கண்பார்வை கொண்ட ஆசிரியரும் நம் குமரகுருபரரை. அன்புடன் வரவேற்று அமரச்செய்து அவருடன் இன்னுரை யாடினர்.

பின்னர் இருவருமாக வெகுநேரம் ஞானமார்க்கமான விஷயாதிகளேப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது. குமரகுருபரர் ஞானசிரியர் கேட்டும் கேள்விகளுக் கெல்லாம் விடைகள் தயங்காது கூறிவரவே, அவரின் அறிவின் ஆற்றல் கண்ட ஞானசிரியர்மிகவும் வியந்தவராய், "இத்தகைய அறிவாற்றல் கொண்ட ஒருவனே யன்றோ நாம் நமது சீடனுக அடைதல் வேண்டு மென்றுநினைத்தவராக சேக்கிழார் பெருமான் பாடிய.

"ஐந்து பேர் அறிவும் கண்களேகொள்ள அளப்பருங் காரணங்கள் நான்கும்
சிந்தையே ஆக குணம் ஒரு மூன்றும் திருந்து சாத்துவிகமே ஆக
இந்து வாழ்சடையான் ஆடுமோனந்த எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்."

என்னும் பாட்டின் உள்ளுரை பொருள்களை எடுத்துரைக்கும் படி கேட்டனர்.

குமாரகுருபரரோ ஞானசிரியரின் அறிவின்பெருந் தன்மையையும் அரும் பெருங் குணங்களையும் கண்டு பரவசமடைந்து, "இவரையன்றோநாம் ஞானசிரியராக அடைதல்வேண்டு" மென்று சிந்திக்கலாயினர்.

அடியார் இச்சையில் எவை எவை யுற்றன அவையவை கூட்டுவித்தருள்பவனன்றோ நம் ஷண்முகப்பெருந்தகை.

விரும்பும் பெரும்புலியூரெம் பிரானருள் மேனிலொரு
திரும்பும் படைத்தழிக்கும் அகிலாண்டத் தொகுதியையே.

(செய்யுட்கோவை).

அவ்வாறாக இறைவன் திருவருள் பெற்ற மெய்யன்புடைய அடியார்கள் இருவரும் உள்ளன்புடன் நினைத்த காலம் கைகூடாமல் போகுமோ? ஒருக்காலும் போகாது நினைத்தவை கைகூடியே தீரும்.

ஞானசிரியர் கேட்ட பாடலின் அனுபவப் பொருளைச் சொல்லத்தொடங்கவும். குமாரகுருபரரது வாக்கு தடைபட்டது; தடைபடவே, "அவருக்கு பரஞானம் வாக்கு தடைபடுமிடத்தே கிட்டும்" என்று, செந்தி நகரிலினிதே மருவி வளரும் நம் ஆண்டவன் செந்திலம்பதியில் திருவாய் மலர்ந்தருளியது ஞாபகத்திற்கு வந்தது. உடனே அனலைக் கண்ட மெழுகென அவர் மனம் உருகியது, தாயைக்கண்ட சேயென உவகை பூத்தார் இருக்கைவிட்டெழுந்தார், கதறிவிழுந்தார், அகமகிழ்ந்தார். "ஐயா நினது அடியேனை ஆட்கொண்டு, ஞானோபதேசம் செய்தல் வேண்டும்; ஆணவ மலத்தினாலே மறைக்கப்பட்ட தமியேன் அறியாமையாற் செய்த பிழைகள் உளவேல் அவை பொறுத்தருள வேண்டும்.

வாழைத் தண்டிலே தழல் கொளுத்தி அதனை பையப் பைய முற்றிலும் தீப்பற்றும்படி செய்யும் சில சூழ்ச்சிகளை யொப்பத் தாங்களும் அடியேனுக்கு ஞானம் நல்கும் பருவம் வராவிடினும். பையப்பைய என் பிறவித்துயரை ஒழித் தருள்புரிதல் வேண்டும்.

"கதலித் தண்டித் பொதிதழல் கொளுத்திப்
பற்று திருப்பினும் பையப் பைய மூட்டுபு
மற்றொரு சூழ்ச்சியாற் பற்றுவித்தாலென
ஒருசிறி தெனினும் பருவமின்றயினும்
பவவிரு றேந்தருள் பதியத்
தவமில் பேதையேன் தனக்கருள் வதுவே."

(பண்டார மும் மணிக்கோவை.

பலர் பலவாறு முரண்படக் கூறும்; சமயங்களில் புகுந் துழலாது தெய்வத்தன்மை நிறைந்த சைவ சித்தாந்த நெறிநின்று இறவா நிலைமைபெற்று இன்பமார்ந்திருக்கும் பிறவாச் சிறப்பை அடையும்மார்க்கம் நல்குதல் வேண்டும். அப்பதவி அடியேனுக்கு கிட்டாதாயின் உயர்ந்த கல்வியும் ஒழுக்கமும் அற்றவாய் பழிப் புடையாராயினும் நின் பொன்னடியை புகலாகப் பெற்றவர்கள் ஆயின் அவ்வடித் தொண்டர்கள் திருவமுதுண்டு தெருக் கடை யெறிந்த பறிகலம் அருந்தி இப்பிறவிக் கடலை கடக்க முயலும் தவமிக்க நாயாகி நின் திருவருளையும் மறவாது பிறக்கும் பிறவியை யாவது அடைய ஆசைப்படுகின்றேன். அதனை எனக் கருள வேண்டும் ஏனைய இந்திர போகத்தையோ! அன்று பிரமனுய்த் தோன்றி படைத்தற் றொழிலையோ! அன்றி அறவணையில் அறிதுயிலிலமர்ந்து உலகைக்காக்கும். கார்மேகவண்ணனாய்த் தோன்றவோ இசைந்திலன்.

பொன்னடித் தவனசேர் நின்னடித் தெண்டர்
திருவமு தார்ந்து தெருக்கடை யெறிந்த
பரிகல மருந்தியிப் பவக்கட லுழக்கும்
வானுடை ஞமலி யாகிநின்
அருளையு மயரா தவதரிப் பதுவே

(பண்டார மும்மணிக் கோவை)

290

உ

ஓம் குஹாயாம:

திருநீற்று மகிமை

ஜி வேலாயுதம், உபாத்தியாயர், தலைக்குளம்,

(127-வது பக்கத் தொடர்ச்சி).

அன்புடையீர் !

உலகத்தினில் யாவும் இருசத்துவாமக இருக்கின்றன என்பதை சற்று கவனியுங்கள் ; பகலில் வெளிச்சந்தரும் பகலோன் காய்கிறான், அதற்கு மாறாக இரவில்வெளிச்சந்தரும் திங்களோ தண்ணென தோன்றுகிறான், அஃதே போன்று நெருப்போ சுடுகிறது நீரோ குளிர்கிறது, மெய்யென கூற ஒன்றுளதேல் பொய்யென கூறவும் ஒன்றுண்டு, ஓர் பக்கம் உண்டெனுங் குரல் எழும்புகிறது மறுபக்கம் இருந்தது இல்லை எனும் குரல் எழும்புகிறது. ஓர் கால் ஒளிவீசு மேல் மறுகால் இருள் வீசுகிறது, ஓரிடம் இன்பம் வேறோரிடம் துன்பம், அருள் உண்டேல் மருளுண்டு, நன்மையொன்றுளதேல் தீமை யொன்றுள, நல்லவருளதேல் தீயவருமுள, பிறப்பொன்றுண்டேல் இறப் பொன்றுண்டு, அறம் ஒன்றுண்டேல் மறம் ஒன்றுண்டென விளங்கா நிற் கின்றது.

மேற்கூறிய காரணங்களை முன்னிட்டு பார்க்கும் பொழுது என்ன தோன்றுகிறது கவனியுங்கள்.

எல்லாயிடமும் நிறைந்து நிற்கிறார் பரமர் அவரே நின் மலராயிருக்கிறார். அருபியாயிருக்கிறார். அதுபோல எல்லாயிடமும் நிறைந்தும் மும்மலமும் அருபியாயும் மாய்கை யென்பவனும் தோற்றுகின்றான். இதை உற்று நோக்குங் கால் கடவுளிற்குமாறாக அன்றோ மாய்கை தோன்றுகிறான் என நமக்கு நன்கு

புழுவாய் பிறக்கினும் நின்னுடைய உபய பாத பத்மங்களை மறவாதிருக்கும் நெறியை அருள வேண்டும்'' என வேண்டித் துதித்தவராய் ஞானசிரியாது பத்ம பாதங்களைப்பற்றி ஒருமை மனத்துடன் சிந்தித்து கசிந்துருகிநின்றார்.

---(தொடரும்).

விளங்காநிற்கின்றதன்றோ. ஆதலினால் கடவுள் மகிமையைக் காட்டும் வெண்ணீற்றிற்கும், மாய்கையின் பெருமையைக்காட்டும் சந்தனத்திற்கும் மாற்றமுண்டெனபதை யுணருங்கள்.

அன்றியும் தாயும் தந்தையும் தன் குழந்தை நல்லவனாயிருக்க விரும்புகிறார். ஆனால் வெளியேசில கெட்ட தோழர்களுடன் அக்குழந்தைச் சேர்ந்து கொள்கிறது. அப்போது எத்தனை நன்மார்க்கத்தில் திருப்பமுயன்றாலும் குழந்தை துன்மார்க்கத்திலே திரிகின்றான். இறுதியில் பலதுன்பங்களில் அகப்பட்டு வருந்துகின்றான். அத்தருணம் யாராயினும் ஒருவர் சென்று நன்மார்க்கத்தில் கூப்பிட்டால் வெகு சீக்கிரத்தில் வந்து நல்லவனாகின்றான். அதுபோலவே !

நமக்கு அம்மையப்பராயிருக்கும் ஏகவல்ல பரம் பொருளாம் செவ்வேள் பெருமான் தமது மக்களாம் மானிடரை காக்குவான் வேண்டி இவ்வவனியின் கண் அடியார்களை யனுப்பி உபதேசித்துள்ளார். அவ்வுபதேசங்களில் மிக முக்கியமாக கூறியது விபூதியை (வெண்ணீற்றை) யன்றோ ? நமது தாய் தந்தை கூறுகின்ற உபதேசமொழிக்கு செவிகொடாது நாம்யாருக்கு செவி கொடுக்கிறோமெனில், இவ்வுலக இன்பத்தினை விரும்பி மாய்கை தன் மொழிக்கு செவிமடுத்து மண், பெண், பொன் எனும் மூவாசைக் கொண்டு துன்பத்திலுழலுகின்றோம்.

நாம் என்ன செய்கிறோம், இவ்வுலகத்தினை நினைந்து, மறுமையை மறந்து, மாய்கையை யறியாது திரியும் கரியை போல தம்மிடமிருக்கும் ஒளியை யறியாது மானிடரா யுழன்று திரிகின்றார். இதற்கு சான்றாக நம்மை நாமே கவனிப்போம். கடவுள் எனும் நினைப்பை யெழச்சிச் செய்யும் நீறணியாது அதற்கு மாறான சந்தனம் எனும் வாசனைப் பொருளையணிந்து கடவுளை இகழ்ந்து மாய்கையை புகழ்கிறோம்.

---(தொடரும்).

உ

காந்தி மதி துணை

வேண்டுகோள்

ஐயா,

1. தமிழ்மக்களெல்லோரும் பிறந்து பேச ஆரம்பித்த நாள்முதல் பொதுவாகப் பேசப்படுவது நமக்குச் சொந்தமாகிய தாய் மொழி தமிழ்என்பதை தமிழ்மக்களனைவர்களும் உணர வேண்டும்.

2. தமிழ்மக்களெல்லோரும் கல்வியில் வளர்ச்சி யடைய வேண்டுமானால் ஒவ்வொருவரும் கட்டாயமாகப் பள்ளிக் கூடங்

களில் செந்தமிழ் மொழியாம் தமிழைக்கற்றுத் தேறுதல்வேண்டும்.

3. தமிழ் மக்களுக்காக திருஞான சம்பந்த சுவாமிகளும் திருநாவுக்கரசு சுவாமிகளும் சுந்திரமூர்த்தி சுவாமிகளும் மாணிக்கவாசக சுவாமிகளும் அருணகிரிநாதரும் முறையே தமிழில் தேவாரம் திருவாசகம் திருப்புகழ் முதலியவைகளில் நற்றமிழ் அருந்தமிழ் என்றும் உலகத்திலுள்ள உயிர்கள் எல்லாம் உய்யும் படிக்கும் திருத்தொண்டத் தொகையும் மனதில் நினைத்தால் மனம் உருகும்படியும் வாயில் தேனூறும் வண்ணமாகவும் பாடியிருக்கத்தமிழை நாமெல்லோரும் மறக்காமலும் கண்ணுங் கருத்துமாய் ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்து வளர்க்க வேண்டும்.

4. தமிழ்மக்களெல்லோரும் தமிழ்மொழியாம் தாய்மொழியை சிரத்தையுடன் வளர்க்க முன்வராமல் புறக்கணித்து மற்ற மொழிகளுக்கு ஆதரவு காட்டி உடந்தையாயிருந்து வந்ததினாலே தமிழ்மொழி மேலோங்கி வளராமல் கீழான நிலைக்கு வந்திருக்கிறதென்பதை ஒவ்வொருவரும் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

5. தமிழ்மக்களை இந்தியாவில் தமிழ்நாட்டிலே கடவுள் பெருங்கருணையுடன் பிறப்பித்து பேசுவதற்கு இனிமையும் மனதிற்கு இன்பத்தை தரக்கூடியதும் உடல் நலம் தருவதுமான தாய்மொழியாம் தமிழ்மொழியை நமக்குள் செய்ததற்கு நாமெல்லோரும் மனமகிழ்ச்சியுடன் இறைவனைவணங்கவேண்டும்.

6. தமிழ்மக்களெல்லோரும் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழிலும் வல்லவர்களாக வேண்டும் தமிழ்மக்களெல்லோருக்கும் கருணையோடு முருகனளித்த முத்தமிழ் சிறந்ததென்பதும் மற்ற மொழிகளெல்லாம் முருகனளித்த முத்தமிழ் மொழிக்கு ஈடாகாதென்பதை ஞாபகப்படுத்துகிறேன். நாம் எல்லோரும் தமிழ் மொழியை வளர்க்கவேண்டு மென்பதை மனக் கருத்திலிருத்தி தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஆக்கம் தேட வேண்டும் என்று பணிவுடன் பிரார்திக்கிறேன்.

சி. சுப்பிரமணிய பிள்ளை,
திருநெல்வேலி டவுன்.